**செ. கு. எண்:066** **நாள் :10.08.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.8.2015

கத்தார் நாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான மீன்பிடி படகில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த கன்னியாகுமரி மாவட்டம், இணையம்புத்தன்துறை மீனவ கிராமத்தினை சேர்ந்த திரு ஆண்ரூஸ் என்பவரின் மகன் திரு ஆன்றனி அருள் அனிஷ், **6.8.2015** அன்று கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஐந்து மீனவர்களுடன் பகரைன் நாட்டின் கடல் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது கடற் கொள்ளையர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி அறிந்து நான் ஆழ்ந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயர சம்பவத்தில் அகால மரணமடைந்த மீனவர் திரு ஆன்றனி அருள் அனிஷ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரணமடைந்த திரு ஆன்றனி அருள் அனிஷின் உடலை அவரது சொந்த ஊருக்கு கொண்டு வரவும், அவர் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து அவரது குடும்பத்திற்கு இறுதி பணப்பயன்களை பெற்றுதர இந்திய தூதரகத்தின் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் பாரதப்பிரதமர் அவர்களை கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் திரு ஆன்றனி அருள் அனிஷ் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**